அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

அக்டோபர்–2023 | மரம் – 2 | கன்று – 10 | ஆண்டு சந்தா ரூ.250/- | தனிப்பிரதி ரூ.25/- | ஆயுள் சந்தா ரூ.2500/-

இப்பொழுதோ,
கர்த்தருக்குள்
வெளிச்சமாயிருக்கிறீர்கள்;
வெளிச்சத்தின்
பிள்ளைகளாய்
நடந்துகொள்ளுங்கள்.
எபே 5:8



ஆசிரியர். ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகர்களே! ஆதரவாளர்களே!

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள்.

நற்செய்திப்பணியின் தொடர் முயற்சியாக இலக்கியங்களின் வழியே மக்களின் வாழ்விடங்களுக்கே இறையரசின் நம்பிக்கையை கொண்டு சென்று, விதைக்கும் இந்த எழுத்துப் பணிக்காக தொடர்ந்து உங்களின் ஆதரவை, ஜெப உதவிகளை அதிகம் எதிர்பார்க்கிறேன்.

கடிகாரத்திற்கு நேரத்தை மட்டும் தான் காட்டத் தெரியும், அதை நல்ல நேரமாகவும், கெட்ட நேரமாகவும் மாற்றுவது மனிதனே. காற்று அடைத்த பலூனை நழுவ விட்டு தவிக்கும் சிறுவனைப்போல வாய்ப்பை நழுவ விட்டவர்கள் தவிக்கிறார்கள். ஆண்டாண்டு காலம் அழுது பார்த்தாலும் மீண்டும் கிடைக்காது அவ்வாய்ப்புகள். ஒவ்வொரு வினாடி நேரமும் கர்த்தர் உங்களுக்குக் கொடுத்திருக்கிற அருமையான சந்தர்ப்பங்கள். அதை நீங்கள் நித்தியத்திற்காகவும் பயன்படுத்த முடியும், வீணாக்கவும் முடியும். கடைசி நியாயத்தீர்ப்பின் நாளிலே தவறவிட்ட சந்தர்ப்பங்களுக்காகவும், வீணாக்கிய நேரங்களுக்காகவும் கணக்கு ஒப்புவிக்க வேண்டியது வரும். ஆகவேதான், ''காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று ஆவியானவர் கூறும் ஆலோசனையை (எபே. 5:16) நினைவுபடுத்துகிறேன்.

பாவத்தில் விழுவதும், பாவ சிற்றின்பங்களில் மூழ்குவதும் சரி செய்ய முடியாத இழப்புக்களைக் கொண்டு வருகிறது! இந்த உலகில் நாம் கிறிஸ்துவுக்காக நம்மை வேறுபடுத்திக் காட்ட நமக்கு சொற்ப காலம்தான் இருக்கிறது. எதிர்காலத்தைக் குறித்த திட்டமிடுதல்களை கிறிஸ்துவுக்குள் அரங்கேற்றுங்கள். தவறான தெரிந்தெடுப்பு என்பது வேரை அரித்துப்போடும் கரையான். தேவபயத்தோடு உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். ''இனிவரும் காலம் குறுகினதானபடியால், கடைசி நாட்களில் கொடிய காலங்கள்'' வருமென்று வேதம் நம்மை எச்சரித்திருக்கிறது (2 தீமோ 3:1).



அன்பின் அரசாட்சிக்கு தகுதியான நம்மைப் போல நமது நண்பர்களையும் கிறிஸ்துவண்டை கொண்டு வர முயற்சி எடுப்போம். சுகமாயிருப்பீர்களாக. இதழுக்குள் சென்று கிறிஸ்துவின் ஆன்மீக உணவை உண்டு மகிழ்வீர்களாக.

அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# அரசமரம்

குடும்பம்: Moraceae

தாவரவியல் பெயர்: Ficus religiosa Linn.

**''கர்வாலிமரமும் அரசமரமும் இலையற்றுப்போனபின்பு, அவைகளின் அடிமரம் இருப்பதுபோல, அதின் அடிமரமும் பரிசுத்தவித்தாயிருக்கும்''** (ஏசாயா 6:13) என்று வேதத்தில் அரசமரம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

தாவரங்களில் அதிகப்படியான பிராண வாயுவை (Oxygen) வெளியிடும் தாவரம் **அரசமரம்** தான். இதனால் அரசமரம் மரங்களுக்கெல்லாம் அரசன் என்று அழைக்கப்படுகிறது. நன்கு வளர்ந்த அரச மரம் நாளொன்றுக்கு 1808 கிலோ கரியமில வாயுவை (Carbon-di-oxide) உள்வாங்கி 2400 கிலோ பிராண வாயுவை வெளியிடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஒரு மனிதனுக்கு தேவையான பிராணவாயுவின் அளவு நாளொன்றிற்கு 800 கிராம். அப்படியானால் ஒரு மரம் எத்தனை பேருக்கு உதவுகிறது என கணக்கிட்டுக் கொள்ளுங்கள். மேலும் இந்த பிராண வாயு காற்று மண்டலத்தில் கலந்து



காலை நேரங்களில் இம்மரத்தின் அருகில் இருக்கும் போது நாளமில்லா சுரப்பிகளில் செயல்பாடுகளைத் தூண்டுகின்றன.

புராதான காலம் தொட்டே அரச மரம் இந்தியாவில் இருந்து வந்துள்ளது. அரச மரத்திற்கு அஸ்வத்தம், அச்சுவத்தம், திருமரம், போதி, கவலை, பேதி, கணவம், சராசனம், மிப்பலம் என பல பெயர்கள் உண்டு.



அரச மரம் 30 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய இத்தாவரத்தின் அடி மரத்தின் விட்டம் 3 மீட்டர் வரை வளரக்கூடியது. பரந்த கிளைகளுடன் காணப்படும். இதன் இலை நீண்ட கூரிய முனையுடன் கூடிய இதய வடிவம் கொண்டது.

பட்டை சாம்பல் நிறம், இலைக்காம்பு நீளமானது. கனிகள் இலைக்கோணத்தில் ஜோடியாகக் காணப்படும். இளம் பருவத்தில் இது ஒட்டு வாழ் தாவரமாகத் தொடங்கி நாளடைவில் பெரும் மரமாவதுண்டு. இதன் இலை, கனி, வேர், பட்டை, விதைகள் அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டது.



இந்திய அரசால் வழங்கப்படும் பொதுப் பட்டங்களில் மிக உயர்ந்த பட்டமான பாரத ரத்னா பட்டம் அரச இலையைக் கொண்டுள்ளது.

வட இந்தியாவில் அரச இலைகள் பட்டுப் பூச்சிகளுக்கு உணவாகப் பயன்படுகின்றன. இம்மரத்தின் கனிகள் பறவைகளால் விரும்பி உண்ணப்படுகின்றன. இதன் பட்டையில் 4% டேனின் உள்ளது. இதன் காரணமாக முற்காலத்தில் தோல் பதனிடுவதற்கு இதன் பட்டை பயன்படுத்தப்பட்டு வந்தது. துணிகளுக்குச் சாயம் மாற்றுவதற்கும் பயன்படுத்தப்பட்டது.



அரசமரம் கைப்பு கலந்த துவர்ப்பு சுவைக் கொண்டது. அரசமரத்து இலை மிகச்சிறந்த மூலிகையாகும். இதன் இலைகளில் அதிகளவு, அஸ்பார்டிக் அமிலம், ஸ்டெராய்டு, மெத்தயோனின், கிளைசின் மற்றும் விட்டமின்கள் என எண்ணற்ற சத்துக்கள் நிறைந்துள்ளன.

அரசமர இலைகள் மட்டுமின்றி காய்களும் மருத்துவ குணமுடையது தான். இலைகளையும், காய்களையும் எடுத்து காய வைத்து, பொடியாக்கி கொள்ளவும். பின், அவற்றை சம அளவில் கலந்த பொடியை,

நீருடன் கலந்து, 14 நாட்கள் தொடர்ந்து குடித்து வந்தால், ஆஸ்துமா உள்ளோருக்கு விரைவில் அற்புத பலனளிக்கும்.

அரச மரம் பிள்ளைப்பேறை உண்டாக்கும். அரசமரம் வெளியிடும் காற்றில் பெண்களின் மாதச்சுழற்சி, அது சம்பந்தமான சுரப்பிகள் சீரடைகின்றன. கருப்பை பலப்படும். அரசமரத்தின் பட்டை, வேர், விதை இவற்றை பாலில் கொதிக்கவைத்து ஆறிய பின் அதில் தேன் கலந்து தொடர்ந்து 1 மண்டலம் அருந்தி வந்தால் தாது விருத்தியடையும். பெண்களுக்கு கருப்பைக் கோளாறுகள் நீங்கும்.

அரச மரத்தின் இலையை காயவைத்து பொடி செய்து அதனை தினமும் ஒரு ஸ்பூன் அளவு சாப்பிட்டு வந்தால் மலட்டுத்தன்மை நீங்கும்.

அரச இலை கொழுந்துகளை எடுத்து நீரில் கொதிக்க வைத்து கஷாயம் செய்து அருந்தி வந்தால் உடல் வன்மை கொடுப்பதுடன் காய்ச்சல் குறையும். வாதம், பித்தம், கபம் போன்றவற்றை சீராக்கி உடலை சீராகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும்.

அரசமரப் பட்டையை நீரில் போட்டு கொதிக்க வைத்து குடிநீராக அருந்தி வந்தால் சொறி, சிரங்கு குணமாகும். வியர்வை நாற்றம் நீங்கும். சருமம் பளபளப்பதுடன், சரும நோய்கள் அண்டாது. சருமத்தில் சுருக்கம் ஏற்படாது.

அரசமரப் பட்டையை சிதைத்து பொடியாக்கி நாள்பட்ட புண்களின் மீது தடவினால் புண்கள் விரைவில் குணமாகும்.

அரசமரப் பட்டையை நீரில் போட்டு கொதிக்க வைத்து ஆறிய பின் அந்த நீரால் வாய் கொப்பளித்து வந்தால் வாயில் உள்ள புண்கள் விரைவில் குணமாகும்.

அரச இலை, பட்டை, வேர் இவைகளை எடுத்து நன்கு இடித்து நீரில் கொதிக்க வைத்து கஷாயமாக்கி தேவையான அளவு பனைவெல்லம் கலந்து அருந்தி வந்தால், மன அழுத்தம், மன எரிச்சல், அதீத கோபம், தீரா சிந்தனை போன்றவை தீரும். அதுபோல் மூளையின் செயல்பாடுகளை தூண்டி, மன அமைதியைக் கொடுக்கும் குணமும் இதற்கு உண்டு.

இளஞ்சிவப்பான அரசமர இலைகளில் சாறு எடுத்து அதில் சிறிதளவு பனங்கற்கண்டு சேர்த்து தினமும் மூன்று வேளை குடித்து வந்தால் மஞ்சள் காமாலையின் பாதிப்பை தடுக்கலாம்.

அரசமரத்தின் கொழுந்து இலைகளை எடுத்து மை போல அரைத்து மோரில் கலந்து குடித்து வந்தால் வயிற்று கடுப்பு சரியாகும்.

அரசமர காய் பொடி, கடுக்காய் பொடி இரண்டையும் சம அளவு எடுத்து பாலில் கலந்து குடித்து வந்தால் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும்.

பாம்பு கடித்து விட்டால், அரசமர இலைகளை கசக்கி இரண்டு ஸ்பூன் சாறு கொடுத்தால், அது பாதுகாப்பு கவசமாக செயல்பட்டு, விஷம் மேற்கொண்டு உடலில் பரவுவதை தடுக்கிறது.

அரச இலைகளுடன் கற்கண்டை சேர்த்து நன்கு அரைத்து கொள்ளவும். அதை நீருடன் நன்கு கலந்து, வடிகட்டிய பின், இந்த நீரை தினமும் குடித்து வந்தால், கல்லீரல் பாதுகாப்பாய் இருக்கும். அதிக குடிப்பழக்கம் உள்ளோர் இதை செய்வது, மிகச்சிறந்த பலனளிக்கும்.

எனவே அரச மரத்தை நட்டு அதன் காற்றை சுவாசித்து நீடிய ஆயுளைப் பெறுவோம். அதன் பயனை நாமும், நம் சந்ததியினரும் பெற வழி செய்வோம்.

தொடர்கதை

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

'ஏய்... விஷயம் தெரியுமா? இயேசு நன்றாக மாட்டிக் கொண்டார். அவரை பிரதான ஆசாரியர்களும், மற்றவர்களும் சேர்ந்து காய்பாவின் முன்னிலையில் வைத்து அடித்து உதைக்கிறார்கள்' ஒருவன் சொல்ல திடுக்கிட்டுத் திரும்பினான் அவன்.

இயேசுவை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்த இயேசுவின் சீடன் யூதாஸ்: 'என்ன சொல்கிறாய்? இ.. இ... இயேசுவை அடிக்கிறார்களா?' யூதாசின் குரல் பிசிறடித்தது.

'அடியா? மரண அடி. இப்படி ஒரு அடியை அவர் வாழ்நாளில் வாங்கியிருக்கவே முடியாது. அப்படி ஒரு அடி!'

'அவருடைய சீடர்களெல்லாம் கூட இல்லையா? மக்கள் யாரும் அவருக்கு ஆதரவாய் பேசவில்லையா?' யூதாஸ் பதட்டமானான்.

'ஆதரவா? ஆதரவு அளித்தவர்களெல்லாம் பயந்து ஓடிவிட்டார்களே. நான் கொஞ்ச நேரம் தான் நின்றேன். அதற்குமேல் நிற்கமுடியவில்லை. இயேசுவை அடிப்பதைப்போல இன்னொருவரை இதுவரை யாரும் அடித்ததேயில்லை.'

'உண்மையாகவா சொல்கிறாய்? இயேசு தப்பிக்கவில்லையா? அதெப்படி? அவர்... அவர்...' யூதாஸ் தடுமாறினான்.

'நாளை அவர் கொல்லப்படுவது நிச்சயம் என்று பேசிக்கொள்கிறார்கள்.'

'ஐயோ... தப்பு செய்து விட்டேனே...' யூதாஸ் எழுந்தான்.

'ஏய்... என்ன ஆச்சு?'

'இல்லை... இயேசுவை நான் தான் அடையாளம் காட்டினேன். அவர் கண்டிப்பாகத் தப்பித்து விடுவார் என்றல்லவா நினைத்தேன். ஐயோ... பெரும் தப்பு செய்துவிட்டேன். எப்படியாவது அவரை விடுவிக்க வேண்டும்...' யூதாஸ் லஞ்சமாய் வாங்கியிருந்த பணமுடிப்பையும் எடுத்துக் கொண்டு ஒரு பிரதான ஆசாரியரைப் பார்க்க ஓடினான்.

யூதாஸின் மனம் பதட்டத்தில் துடித்தது. தவறிழைத்துவிட்டோமே என்று அவருடைய உள்ளம் கதறி அழுதது. இத்தனை நாள் கூடவே இருந்துவிட்டு இப்படிக் கடைசியில் நானே துரோகியாகிவிட்டேனே. அரற்றியபடியே ஓடிய யூதாஸ் தேவாலயத்தில் அமர்ந்திருந்த பிரதான ஆசாரியரின் முன்னால் வந்து விழுந்தான்.

'ஐயா... இயேசு ஒரு பாவமும் அறியாதவர். அவரைக் காட்டிக் கொடுத்து நான் மிகப்பெரிய பாவம் செய்துவிட்டேன்...' யூதாஸ் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க அவசர அவசரமாய்ச் சொன்னான்.

'அதனால் எங்களுக்கென்ன?'

'ஐயா... அது என்னுடைய தவறு. இதோ நீங்கள் தந்த பணம் அப்படியே இருக்கிறது. இதைப் பெற்றுக் கொண்டு இயேசுவை விட்டு விடுங்கள்' யூதாஸ் கெஞ்சினான்.

'விட்டு விடுவதா? உன்னுடைய வேலை முடிந்துவிட்டது. இனிமேல் உன்னுடன் எனக்கென்ன பேச்சு. போய்விடு..' பிரதான ஆசாரியர் தலையைத் திருப்பினார்.

'ஐயா... அப்படிச் சொல்லாதீர்கள். அவரை அடிக்கிறார்களாம், கொல்லப் போகிறார்களாம். எல்லாம் என்னால் தானே... இந்தப் பணம் எனக்கு வேண்டாம். இது பாவப்பட்ட பணம். இதை வாங்கிக் கொள்ளுங்கள். இதற்கு மேலும் பணம்

வேண்டுமென்றால் நான் தருகிறேன். பெற்றுக் கொண்டு தயவு செய்து இயேசுவை விட்டு விடுங்கள்' யூதாஸ் விடாமல் கெஞ்சினான்.

'வெளியே போகிறாயா இல்லையா? உனக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. போய்விடு' பிரதான ஆசாரியர் கத்தினார்.

'இதோ... வெள்ளிக் காசுகள். எனக்கு இவை வேண்டாம். கேவலம் பணத்துக்காக ஒரு மாமனிதனைக் காட்டிக் கொடுத்துப் பாவம் செய்துவிட்டேன்...' அழுது கொண்டே யூதாஸ் தன்னிடமிருந்த பணப்பையை தேவாலயத்தினுள் வீசி எறிந்தான். வெள்ளிக்காசுகள் ஆலயம் முழுவதும் சிதறின.



யூதாஸ் அதற்குமேல் அங்கே நிற்கவில்லை. குற்ற உணர்வு அவனைத் துரத்தியது. இயேசுவைக் காட்டிக் கொடுத்த குற்ற உணர்வுடன் இனிமேல் வாழமுடியாது என்று முடிவெடுத்த யூதாஸ் கண்ணீர் விட்டழுதான்.

'இயேசுவே...' அவனுடைய உதடுகள் விடாமல் முணுமுணுக்க யூதாஸ் உயிர்விட்டான். தனது தவறுக்கான மன்னிப்பை நேரடியாக இயேசுவிடம் வாங்காமல் அவன் குற்ற உணர்வில் இறந்து போனான். இதனால், இயேசுவின் மன்னிப்பையும் மீட்பையும் இழந்தான். நன்றாக வாழவேண்டுமென்று லஞ்சமாய் வாங்கிய பணம் ஆலயத்துக்குள் சிதறிக் கிடந்தது. பிரதான ஆசாரியர் அவற்றைப் பொறுக்கினார்.

'இதைக் காணிக்கைப் பெட்டியில் போடாதீர்கள். ஏனென்றால் இது இரத்தத்துக்கான விலை. எனவே வேறு ஏதாவது செய்யுங்கள்' ஆலய நிர்வாகிகளிடம் தலைமைக்குரு சொன்னார்.

'இதை வைத்து ஒரு குயவன் நிலத்தை வாங்குவோம். அன்னியரை அடக்கம் செய்வதற்குரிய ஆலய நிலமாக அது இருக்கட்டும்.' நிர்வாகிகள் முடிவெடுத்தார்கள். அவர்கள் ஒரு நிலத்தை வாங்கினார்கள். அதை இரத்த நிலம் என்று அழைத்தனர். குளிர் உயிரை உறைய வைக்க உலவிக்கொண்டிருந்த அதிகாலை. பிலாத்து காத்துக் கொண்டிருந்தான். அன்னா ஏற்கனவே சொல்லியிருந்ததன்படி பிலாத்து இயேசுவின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தான்.

இயேசுவுக்கு என்ன தண்டனை வழங்குவது. இயேசு எல்லோரையும் தன்னுடைய பேச்சினாலும், செயலினாலும் வசீகரித்து வைத்திருக்கிறார். இப்போது மதவாதிகளுக்கு ஆதரவாகச் செயல்படாவிடில் தன்னுடைய பதவி போய்விடும் அபாயமும் இருக்கிறது. அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டால் ஒட்டுமொத்த மக்களிடமும் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகிறது. பிலாத்து இரவு முழுக்க யோசித்துக் கொண்டிருந்தான். அவனுடைய சிந்தனையைக் கலைத்தாள் அரசி பிரோகுலா, பிலாத்துவின் நேசத்துக்குரிய மனைவி.

'என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?'

'இல்லை... எருசலேமில் இயேசு என்னும் ஒரு நபர் அன்னாவுக்கும், காய்பாவுக்கும் எதிராக புரட்சி செய்கிறானாம். அவனை அங்கே தலைமைச் செயலகத்தில் வைத்து விசாரித்து விட்டு தீர்ப்புக்காக இங்கே கொண்டு வருவதாக அன்னா சொன்னார். அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியாக வேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்...' பிலாத்து சொல்லி முடிக்கும் முன் படபடத்தாள் அரசி.

'யார்... இயேசுவையா? வேண்டாம்.. அவருக்கு எதிராக எந்தத் தீர்ப்பையும் வழங்கி விடாதீர்கள்.'

பிலாத்து வியந்தான். இயேசு ஊரிலுள்ள மக்களை மட்டும் தான் வசீகரித்திருக்கிறார் என்று பார்த்தால் அரச பரம்பரையையே அசைத்திருக்கிறாரே!

'நீயும் இயேசுவின் மறைமுக சீடர்களில் ஒருத்தியா? உனக்கெப்படி அவரைத் தெரியும்?' பிலாத்துவின் கேள்வி சற்று எள்ளலுடன் துள்ளியது.

'எனக்கு அவரைத் தெரியாது. ஆனால் நேற்றிரவு அவரைக் குறித்து ஒரு கனவு கண்டேன்...'

'கனவா?'

'ஆம். அவர் நல்லவர். நாம் அவருக்கு எதிராக எந்தத் தீர்ப்பையும் வழங்கி விடக் கூடாது. அது நமக்கு மிகப்பெரிய இரத்த பாவத்தைக் கொண்டு வரும்' அவள் தொடர,



பிலாத்து குழம்பினான். எது எப்படியெனினும், ஏற்கனவே பிலாத்து இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். இயேசு பெரிய குற்றவாளியல்ல என்பதை அவன் அறிந்திருந்தான். பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும், பரிசேயர்களும் இயேசுவிடம் வெறுப்படைந்திருப்பதையும், பொறாமை கொண்டிருப்பதையும் கூட பிலாத்து அறிந்திருந்தான். இப்போது தன் மனைவியும் இயேசுவுக்கு ஆதரவுக் கொடி காட்டியிருப்பதால், எப்படியாவது இயேசுவுக்குக் குறைந்தபட்ச தண்டனையை வழங்கி இயேசுவை விடுவித்துவிட வேண்டும் என்று மனதில் நினைத்தான். அப்போது அரண்மனை மணி அடிக்கப்பட்டது!

அன்னாவும், காய்பாவும் இயேசுவையும் கூட்டிக்கொண்டு கூட்டத்தினருடன் விடிவதற்கு இன்னும் நிறைய நேரமிருந்த அந்த அதிகாலைப் பொழுதில் பிலாத்துவின் மாளிகை வாசலை வந்தடைந்திருந்தார்கள்.

தொடரும்...



கிறிஸ்துவின் பணியில் ஆதரவு கரம் நீட்ட விரும்பினால் காசோலை (Cheque) அல்லது வரைவோலை / கேட்புக் காசோலை (D.D.) கீழ்க்கண்ட பெயரில் எடுத்து, எங்களது அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் (Register Post) / தூதஞ்சலில் (Courier) அனுப்புங்கள். கூடுதல் தகவலுக்கு:

✆ 9003067777


G Pay 98406 95296

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| ACCOUNT NO. | : | 048 201 000 010 247 |
| BANK NAME | : | **INDIAN OVERSEAS BANK** |
| IFSC CODE | : | IOBA0000482 |
| SWIFT CODE | : | IOBAINBB001 |
| BRANCH & CODE | : | MAHALINGAPURAM BRANCH & 482<br>CHENNAI - 600 034. |

# அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாமென்ற பிலாத்துவின் மனைவி

**இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 5 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.**





விடைகள்: 1. தூண், 2. ஆணின் உடை, 3. பெண்ணின் உடை, 4. வீரனின் தலைசீரா, 5. ஈட்டி

# கோழி

**கோழி** (chicken) என்பது காடுகளிலும், மனிதர்களால் வீடுகளிலும் அதற்கான கோழிப் பண்ணைகளிலும் வளர்க்கப்படும் ஒரு அனைத்துண்ணிப் பறவையாகும். அவை நிலத்தைக் கிளறி விதைகள், பூச்சிகள் மற்றும் சற்றுப் பெரிய விலங்குகளான பல்லி, எலி போன்றவற்றை உண்ணும். கோழிகள் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பவை. கோழி என்பது ஆண் பெண் என இரண்டிற்குமான பொதுப்பெயராகும். கோழி பெண்ணினம் பேடு எனவும், ஆணினம் சேவல் எனவும் அழைக்கப்படுகின்றது. சிறிய கோழிகள் 'கோழிக் குஞ்சுகள்' என அழைக்கப்படுகின்றன.

2003-ல், உலகில் இவற்றின் எண்ணிக்கை 24 பில்லியன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது உலகில் உள்ள எந்த ஒரு பறவையைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கையாகும். பொதுவாக இறைச்சிக்காகவும், முட்டைக்காகவும் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டம் தொழில்முறை கோழிப் பண்ணைகளுக்குப் பெயர் பெற்றது.





உலகிலுள்ள எல்லாக் கோழியினங்களும் இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட சிவப்புக் காட்டுக்கோழியில் (Red Jungle Fowl) இருந்துதான் தோன்றியதாகக் கூறப்படுகிறது. அவை சேவல் சண்டைக்காக ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களில் பயன்படுத்தப்பட்டன. பின்னர் அவை முட்டைக்காகவும், இறைச்சிக்காகவும் வளர்க்கப்பட்டன. இந்தியாவிலிருந்து உள்ளூர்க் கோழிகள் மேற்கு சின்ன ஆசியாவிற்கும் கிரேக்கத்திற்கும் கி.மு. 5ம் நூற்றாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டன. 18வது எகிப்திய வம்ச காலத்தில் எகிப்துக்கு கோழிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

கோழியினங்கள் பொதுவாக நான்கு முக்கியமான பெரிய இன வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1) அமெரிக்க கோழியினங்கள் 2) ஆசிய கோழி இனங்கள் 3) ஆங்கில கோழி இனங்கள் 4) மத்திய கோழி இனங்கள்.

இந்தியாவில் நான்கு கோழியினங்கள் உள்ளன. அவையாவன. அசீல், சிட்டகாங், பர்சா மற்றும் கடக்நாத்.

வளர்க்கும் கோழிகள் நீண்ட தூரம் பறக்க முடியாதவை. எடை குறைந்த பறவைகள் குறுகிய தூரத்திற்கு வேலியின் மேலாக, மரங்களுக்குள் பறக்க வல்லன. கோழிகள் தங்கள் சுற்றுவட்டத்தைப் பார்க்க எப்போதாவது பறப்பவை. ஆனாலும் ஆபத்து என்றால் அவை பொதுவாக பறக்கும்.

கோழிகளின் தலையின் மேல் பகுதியிலுள்ள சதைப்பகுதி அதன் கொண்டையாகும். கோழிகளின் இனத்திற்கேற்றவாறு அவற்றின் கொண்டை அமைப்பு தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும். கோழிகளின் கொண்டை அமைப்பு அவற்றின் மரபுப்பண்புகளைப் பொறுத்து இருக்கும்.

கோழி இனத்தில் அதன் முட்டை ஒவ்வொரு நாளும் வெளியேற்றப்படுகிறது. கோழி எட்டு ஆண்டு காலம் வரை உயிர் வாழும். அதன் ஆயுளில் சுமார் 1,500 முட்டைகளை இடுகிறது. முட்டையில் மஞ்சள் கருவில் விட்டமின் ஏ, கால்சியம், விட்டமின் டி, பொட்டாசியம், மெக்னீசியம், விட்டமின் பி6, பி12 ஆகியவை உள்ளன.

சராசரி 21 நாட்களில் அடைகாக்கும் காலமாக கருதப்படுகிறது. கோழி அடைகாக்கும்போது, அது கோபமாக இருக்கிறதா? சாதாரணமான மனநிலையில் இருக்கிறதா? என்று கண்டுபிடிப்பதும் சிரமம். கோழி அடைகாக்கும்போது அதன் முன்னால் ஆள்காட்டி விரலை நீட்டிப் பாருங்களேன். ‘ஹிப்னாடிஸம்’ செய்வதுபோல நம் கைவிரலை ஆட்டுவதற்கேற்ப, அதன் தலை மட்டும் ஆடும். தீடீரென்று மின்னல் வேகத்தில் கொத்தும். விரலில் ரத்தமே வந்துவிடும்.

என்னதான் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தாலும், கழுகு, கீரிப்பிள்ளை, பூனைகள் போன்றவற்றில் இருந்து நம் கோழிக்குஞ்சுகளைப் பாதுகாப்பது சிரமம்தான். கூண்டிற்குள் அடைக்கும் நேரம் வந்ததும், பெரும்பாலான குஞ்சுகள் தாய் சொல்லைக் கேட்டு அமைதியாக உள்ளே சென்று அமர்ந்துகொள்ளும்.

வளர்ந்த கோழிகள் சதைப்பற்றுள்ள முகடான ‘சீப்பினை’ (கொண்டை) தலையில் கொண்டும், சொண்டுகளின் கீழ் ‘கோழித்தாடை’ எனப்படும் தொங்கும் தோல் மடிப்புகளையும் கொண்டிருக்கும்.

சேவலை அடையாளப்படுத்துவது அதனுடைய கொண்டையாகும். வளர்ந்த சேவல் அதன் வளர்ந்த சீப்பு (கொண்டை) மூலம் இலகுவான அடையாளம் காண முடியும். சேவல்கள் பொதுவாகவே பேடுகளிடமிருந்து வேறுபாடு கொண்டு காணப்படும். சேவலின் நீண்ட வாலுடன் மினுமினுக்கும் கவர்ச்சியான சிறகுகளின் தொகுதி, கழுத்தில் நீட்டிக் கொண்டிருக்கும் இறகுகள், பின்புற இறகுகளில் காணப்படும் பிரகாச, தடித்த வண்ணம் என்பன ஒரே இன பேடுகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஆனாலும் சில இனங்களில் சேவலின் கழுத்தில் நீட்டிக் கொண்டிருக்கும் இறகுகள் தவிர்த்து மற்ற பகுதிகள் பேடு போன்றே காணப்படுவதும் உண்டு. ஆணும் பெண்ணும் சீப்புக்களையும் (கொண்டை) தாடைகளையும் கொண்டு காணப்படும். ஆயினும் பல இனங்களில் ஆண்களே இவற்றை அதிகம் கொண்டு காணப்படும்.

பேடை கவர்வதற்காக சில சேவல்கள் அவற்றைச் சுற்றி நடனம் ஆடும். அத்துடன் அடிக்கடி தன் இறக்கையை பேடுக்கு அருகில் தாழ்வாகக் கொண்டுவரும். பேடுக்கும், குஞ்சுகளுக்கும் ஆபத்து வரும் நேரத்தில் சேவல் கூவும். அதேவேளை சேவல் அதிகாலையில் கூவும் ஆற்றல் கொண்டது.

உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்று சொன்ன பேதுருவைப் பார்த்து, இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்றார் இயேசு (மத்தேயு 26:33, 34). ஒரு கோழி தன் குஞ்சுகளை இறக்கைகளின் கீழே பாதுகாப்பது போல எருசலேம் மக்களைப் பாதுகாக்க தான் விரும்பியதாக இயேசு சொன்னார் (மத்தேயு 23:37; லூக்கா 13:34). மனதைத் தொடும் இந்த உவமையும், அப்பாவிடம் முட்டையைக் கேட்கும் மகனைப் பற்றிய உதாரணமும் (லூக்கா 11:11,12), முதல் நூற்றாண்டு இஸ்ரவேலில் கோழிகள் பொதுவாக வீட்டில் வளர்க்கப்பட்டதைக் காட்டுகின்றன. பறவைகளிலேயே அதுதான் மிக அதிகமாக வளர்க்கப்பட்டது, மிகப் பிரயோஜனமாகவும் இருந்தது.

# கோழி தனது கூட்டிற்கு செல்ல சரியான வழிகாட்டுங்கள்




# நல்ல மேய்ப்பர் இயேசு


**1-35 புள்ளிகளை இணைத்து அழகான வண்ணம் தீட்டவும்.**




# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். (வெளி. 3:20)




தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான். (மத்தேயு 16:25)




எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். (1 தீமோ 2:1)




அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங்கீதம் 1:3)

# கற்க... கற்க...

''உங்களுக்காக இன்னொருவர் வேலை செய்யலாம், உங்களுக்காக வேறொருவர் சிந்திப்பதில்லை'' என்று, க்ளெமெண்ட் ஸ்டோன் என்ற அறிஞர் கூறியிருக்கின்றார்.

ஆனால், அனைவருக்குமாக சேர்த்து, நம் மூத்தோர், முன்னோர், அறிஞர்கள், ஞானியர், தலைவர்கள் எனப் பலரும், 'வாழ்வியல் சிந்தனைகளை, வழிகாட்டும் நல்ல நெறிமுறைகளை' நமக்கென தந்து சென்றிருக்கிறார்கள். நாம் கற்பதற்கென்றே அவர்கள் விட்டுச் சென்றவை ஏராளம்! அவையெல்லாம் அனுபவ அறிவாலான பொக்கிஷங்கள்!

ஒருவர், வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என நினைக்கும் போதே, எத்துறையில் எவ்விதமாக வெல்வது? என்ற சிந்தனைத் தோன்ற வேண்டும். அத்துறை சார்ந்த அறிவையும், தகுதியையும் வளர்த்துக் கொள்ள ஆர்வம் கொண்டிட வேண்டும்.

சாதித்தோரின் அனுபவங்களிலிருந்து தனக்கு வேண்டியதும், வேண்டாததும் எதுவெனப் பிரித்தறிந்து உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

சாதிப்பதற்கான வழிமுறைகள் எவ்வகையில் அறிந்தாலும், அதனைக் கற்றுக்கொள்ளத் தயங்க வேண்டாம். கற்கும் விஷயங்களிலிருந்து உங்களுக்கான பயணம் எளிதாகக் கூடும். அவற்றை வெல்வதற்கான உந்து சக்தியாக நீங்கள் கருதுவீர்களேயானால், உங்களுக்கான முயற்சியில் எதிர்வரக்கூடிய தடைகளைத் தாண்டுவது சாத்தியமாகும்.

படிக்கும் நூல்களிலிருந்தும், பார்க்கும் விஷயத்திலிருந்தும், பழகும் மனிதர்களிடமிருந்தும் நீங்கள் ஏராளமாகக் கற்றுக் கொள்ளலாம். வெல்லும் சிந்தனைக்கு அவ்வாறு கற்கும் விஷயங்கள் உரமாகி நிற்கும் என்பது உண்மை! காந்திக்கும், கலாமுக்கும், லிங்கனுக்கும், லியோ டால்ஸ்டாய்க்கும் அறிவினை, ஆற்றலை அள்ளி வழங்கிய நூல்கள் உங்கள் வெற்றிக்கும் உறுதுணையாகலாம். வாசிக்கும் போதே உங்களால் நேசிக்கப்படும் எழுத்துகள், உங்கள் வாழ்க்கையையே வெற்றிகரமாக ஆக்கிவிடக் கூடும்.

உங்களை நீங்களே மேம்படுத்திக் கொள்ள, நீங்கள் மேற்கொண்டிருக்கும் வேலையில், உழைப்பில் முழுக் கவனத்தையும் குவியுங்கள். உற்சாக மனநிலையில் எப்போதும் இருங்கள். குறுக்கிடும் மனச்சோர்வைப் புறந்தள்ளுங்கள். நேரத்தின் மதிப்பை உணருங்கள். நேர்மையாய் நடந்து கொள்ளுங்கள். கற்றுக் கொண்டுள்ள பல நல்ல விஷயங்கள் தொடர்ந்து உங்களை வழிநடத்தி வெற்றியின் வாசலில் கொண்டு நிறுத்தும்!

ஒரு செயலின் மீது நீங்கள் கொண்டிருக்கும் ஈடுபாடுதான், அதுபற்றிய அனைத்தையும் கற்றுக் கொள்ள வைக்கும். அதற்கான தேடுதலில் உங்கள் மனம் ஆர்வம் கொள்ளும். ''நமக்கான வெற்றிப் பாதைக்கு இவை, வழிகாட்டும் விளக்குகளாக இருக்கும்'' என்று, நீங்கள் நினைத்தால் மட்டுமே, அனைத்தையும் கற்றுணர்வது சாத்தியமாகும்.

நோபல் பரிசினைப் பெற்ற இந்திய விஞ்ஞானி சர்.சி.வி. இராமன் அவர்களிடம் வேலை கேட்டு இளைஞர் ஒருவர் வந்தார். அவரிடம் சர்.சி.வி. இராமன், பௌதீகம் சம்பந்தப்பட்ட சில கேள்விகளைக் கேட்டார். அந்த இளைஞருக்கோ, அதற்கான விடையினை சொல்லத் தெரியவில்லை. உடனே சர்.சி.வி. இராமன், ''பௌதீகம் பற்றித் தெரிந்திராத உங்களுக்கு, என்னால் வேலை கொடுக்க முடியாது!'' எனக் கூறினார்.

ஏமாற்றத்துடன் வெளியில் வந்த அந்த இளைஞர், அறை வாசலில் ஒரு குண்டூசி கிடப்பதைக் கண்டு அதை எடுத்து, அதற்குரிய இடத்தில் வைத்துவிட்டு வெளியே செல்லப் புறப்பட்டார். அதனை தற்செயலாக கவனித்த சர்.சி.வி. இராமன் அவர்கள், அந்த

இளைஞரை திரும்பக் கூப்பிட்டு, ‘‘உன்னை நான் வேலையில் சேர்த்துக் கொள்கிறேன். உனக்கு, பௌதீகம் தெரியாவிட்டாலும், என்னால் அதனைக் கற்றுத் தர முடியும். ஆனால், பொறுப்பு இல்லாதவர்களுக்கு என்னால் பொறுப்பை கற்றுத்தர முடியாது’’ என்றார்.

உங்களுக்குப் புரிகிறதல்லவா? எந்த வேலையிலும், உழைப்பிலும் அக்கறை வேண்டும். கூடவே, ஆர்வம் இருக்க வேண்டும். அப்போதுதான், தெரியாதவற்றையும் கற்றுணர்ந்து வெற்றி பெற முடியும்! ‘‘உற்சாகம் இல்லாமல் எதுவுமே பெரிதாக, எப்போதுமே சாதிக்கப்பட்டதில்லை’’ என்று தத்துவ முத்தினை உதிர்த்த அறிஞர் மெர்சனை இந்நேரத்தில் நாம் நினைவு கொள்வோம்.

எந்தவொரு வெற்றியுமே, எளிதாக கிடைப்பதல்ல! காலமும், நேரமும், உழைப்பும், திறமையும், கூடவே காத்திருக்கும் பொறுமையும் வேண்டும். இதனுடன் கற்றுக் கொள்ளும் அறிவும், செயலூக்கமும் கை கோர்க்கு போது, வெற்றிக்கனியின் சுவை மிக இனியதாகவே இருக்கும்.

‘‘பல செயல்களால் தொடர்ந்து பின்னப்பட்டுக் கொண்டே இருக்கும் வாழ்க்கையெனும் வலையில் நம் சிலந்திகளைப் போல காலம் கழிக்கிறோம்’’ என்றால், அயராமல், தளராமல் முயன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று தானே அர்த்தம்!

தளர்ச்சி ஏற்படும் போதெல்லாம் நம்மைத் தாங்கிப் பிடிப்பது எது? நம் முயற்சியின் போது இடையூறு ஏற்படும் போது, முன்னே நிற்பது எது? எதுவுமே தோல்வியல்ல. எனக் கூறி அவ்வப்போது நம்மை எச்சரித்துக் கொண்டிருப்பது எது. நாம், கற்ற, கேட்ட, கண்ட, ‘அறிவு’ தானே? ஆம். அனுபவம் என்பது (அதாவது, படிப்பினை) எச்சூழலில், எவ்வகையில் ஏற்பட்டாலும் அதனை, காலத்திற்கேற்ப துணையாக்கிக் கொள்வது, நன்மைக்கான நடைமுறை வழியாகும்.

‘‘எனக்கு வேண்டியது, இது!’’ என நீங்கள், அதை நோக்கி அடியெடுத்து வைக்கும் போது, உங்களின் நம்பிக்கை, அதற்கான அடைதலை, வெற்றியை இலகுவாக்கும்.

கற்றலின் துணை கொண்டு, உங்கள் விருப்பத்தை தீவிரப்படுத்தும் போது, அதற்கென இடைவிடாது உழைக்கும் போது... விருப்பம் வசப்படும். இவ்வெற்றி பற்றிக் குறிப்பிடும் உளவியல் அறிஞர்கள், ‘‘தன்னம்பிக்கை பெற்றுத் தந்த வெற்றி இது’’ என்பார்கள்.

உங்கள் கண்ணெதிரே, செய்யக்கூடிய காரியங்கள் ஏராளமாய் கொட்டிக் கிடக்க, ‘எதைச் செய்ய?’ ‘எப்போது செய்ய?’ எனக் கேட்டுக் கொண்டிருப்பது, அறிவீனம் அல்லவா? இன்னும் நம்மில் பலர், ‘‘இதைச் செய்ய எனக்கு நேரம் வரவில்லை!’’ ‘‘அதற்கென்று அவர்கள் இதுவரை என்னை அழைக்கவே இல்லை!’’ என்று சொல்லக் கேட்கின்றோம் அல்லவா!

ஆனால், மாவீரர் நெப்போலியன் எப்படிக் கூறுவான் தெரியுமா? ‘‘வாய்ப்புகள் வருமெனக் காத்திருப்பவன் கோழை; தமக்கான வாய்ப்புகளை தாமாக உருவாக்கிக் கொள்பவன் தான் புத்திசாலி’’

ஆம். வேண்டும்... வெற்றி! என்று வெறிபிடித்து ஓடிய மாவீரனல்லவா நெப்போலியன். அவன் சொல்வதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். அதுவே நன்மை தரும்! வெற்றி என்பது நீங்கள் நினைத்ததை அடைவது என்பது மட்டுமல்ல. அதற்கான வழியில் நீங்கள் எதிர்கொண்ட சங்கடங்களை சமாளித்தும், அவற்றைக் கடந்து நிலைத்ததுமே ஆகும்.

எதில் ஒன்றிலிருந்தும் நீங்கள் கற்றுணரலாம். அவைதான், அனுபவங்கள் ஆகின்றன. அந்த அனுபவத்தை, மற்றொருவர் கேட்டுணர அல்லது படித்துணர அல்லது பார்த்துணர, வழிகாட்டும் குரு போல அது ஆகின்றது. வாழ்வினைச் செம்மையாய் ஆக்குகின்றது.

# கேள்வி நேரம்

எந்திரமயமான வாழ்க்கைச் சூழலில் அடுத்தவருக்கான ''நலம் நாடும் பண்பு'' மெல்ல, மெல்ல நசிந்து வருவது எண்ணி வேதனைப்பட நேர்கிறது.

''கொடுப்பதும், பெறுவதும் இயல்பு'' என்ற நிலை மாறி, முகம் பார்த்த உடனேயே கதவினை அறைந்து மூடும் மனோபாவம் எங்கெங்கும் காண நேர்கிறது. அண்டை வீட்டார், அருகில் இருப்போர் யாரெனத் தெரியாமலே வாழும் போக்கு அதிர்ச்சியைத் தருகிறது.

எல்லோருக்கும் 'வேலைப்பளு', கடமைகள், காரியங்கள் என்று பலவித பரபரப்புகள் இருப்பது உண்மைதான். ஆனாலும், அவரவர்க்குரிய நேய நெஞ்சை திரை போட்டு மூடி வைப்பது முறையாகுமா? 'மனிதம் என்பது புனிதம்' என்பதை உணர வேண்டியது அவசியமல்லவா?

ஒரு மனிதர் மற்றொருவர்க்கு உதவிட நினைத்து செயல்படுவது நேயத்தின் வெளிப்பாடு. அன்பு, கருணை, இரக்கம் போன்ற குணங்களுடன் ஒருவர் இருக்கும் போதுதான் நேய மலர் மலர்ந்து உள்ளும், புறமும் மணம் வீசி மகிழ்விக்கும். கூடவே நல்ல ஆரோக்கியம் ஏற்பட்டு, ஆயுள் நீடிக்கும்.

தன்னையே உலகிற்கு அர்ப்பணித்த அன்னை தெரசா, அகிம்சையை வலியுறுத்திய அண்ணல் காந்தியடிகள், அனைத்துயிர்க்குமாய் இரங்கிய வள்ளலார், ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை காண விரும்பிய பாரதியார்... இப்படியாக எத்தனை, எத்தனை நல்ல உள்ளங்கள் நம்மிடையே வாழ்ந்திருக்கின்றன என்பதை நெஞ்சில் நிறுத்தி அவர்கள் வழியே நேயம் வளர்ப்பது நம் கடமை என்பதை உணர வேண்டும்.

'பிள்ளைகள் இல்லா உலகம்' ஒன்றை எவராலுமே கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாது. வாழ்க்கையின் வண்ணங்கள் அவர்கள்! எழிலார்ந்த எண்ணங்கள் எவரிடமும் உருவாக காரணமாக இருப்பவர்கள் அவர்கள்!

அப்படி இருக்கையில், குட்டிக் குழந்தைகளின் சுட்டித்தனங்களை அனைவரும் பிடித்திருப்பதாய் உணர்கையில், அவர்களின் 'கேள்வி நேரங்கள்' மட்டும் ஏன் பெரியவர்களால் புறக்கணிக்கப்படுகிறது?

பேசத் துவங்கும் நாள் முதலாக, குறிப்பாக பள்ளி நாட்களில் அவர்களுக்குள்ளாக அறிந்து கொள்ளத் துடிக்கும் ஆர்வத்துடன் ஆயிரமாயிரம் கேள்விகள் அணிவகுக்கும். இது என்ன? அது என்ன? ஏன் இப்படி? எதனால் அப்படி? மழலையாய் அவர்கள் கேட்கும் போது, மனதை உள்ளபடி திறந்து வைத்திருப்பார்கள். பதில்களைக் கூறக் கூற தொடர்ந்து சிந்திப்பார்கள்.

பிள்ளைகள் கேள்வி கேட்கத் தொடங்கும் போது, ''போதும்... பேசாதே! வாயை மூடு!'' என்று பலர் அதட்டுவதை பார்க்கும் போது, சின்னஞ்சிறு மலர்களின் முகம் வாடுவதைப் போலவே நம் மனமும் சுருங்குகிறது. ''படி... படி!'' என்று பள்ளிகளில் கூறும் போது, ஐயங்களை ஏற்படும் குழந்தைகளுக்கு அவற்றை உணர்ந்து தெளிவுபடுத்தும் ஆசிரியர்கள் இன்றைக்கு எத்தனை பேர் இருக்கிறார்கள்?

நேர நெருக்கடியை உண்டு பண்ணும் அளவில் பள்ளி நிர்வாகம் தயாரித்து தரும் 'கால அட்டவணைக்குள்', பாவம்... கட்டுண்டு கிடக்கிறார்கள்.

ஊக்கம் கொடுப்போம் பிள்ளைகளுக்கு! உற்சாக பதிலளிப்போம்!

# இனிமையாக பேசுங்கள்

''அப்படி நான் பேசியிருக்கக் கூடாது!'' என்று எவராவது, எப்போதாவது நினைத்திருக்கிறோமா? உண்மையிலேயே நம்முடைய நாவை அடக்க நாம் எல்லோருமே படாத பாடுபடுகிறோம். எப்படிப்பட்ட மிருகமாய் இருந்தாலும் அதை நம்மால் யாராலும் அடக்க முடியாது.

அதற்காக, எப்படியோ போகட்டும் என்று நம் நாக்கை அதன் போக்கிலேயே விட்டுவிட முடியுமா? அப்படி விட்டுவிட முடியாது. அது சின்னஞ்சிறு உறுப்பாக இருந்தாலும், சக்தி வாய்ந்த உறுப்பு. எனவே, அதை அடக்கி நம் கட்டுப்பாட்டில் வைப்பது எப்படி என்று சிறிதளவாவது சிந்திப்போம்.

''மட்டுக்கு மிஞ்சின பேச்சு அளவற்ற தீமைகளை விளைவிக்கும்; தம் நாக்கை அடக்குவோர் விவேகமுள்ளவர்கள்'' என்றெல்லாம் பலர் கூறக் கேட்டுள்ளோம். இது உண்மை தான்.

நாம் அதிகமாக பேசும் போது யோசிக்காமல் எதையாவது சொல்லி விடுகிறோம். வேண்டாத வார்த்தைகளை கொட்டி விடுகிறோம். அதாவது, மற்றவர்களை புண்படுத்தும் விதத்தில் பேசி விடுகிறோம். சொல்லப் போனால் அடக்கி வைக்கப்படாத நாக்கு, காட்டுத் தீ போன்றது.

ஒருவரைப் பற்றிய வீண் பேச்சு, கேடு விளைவிக்கும் அவதூறை மளமளவென்று பரப்பிவிடுகிறது. என்றாலும், எப்போதும் நாம் நம் நாக்கை அடக்கி வைத்தோமென்றால் அதாவது, ஒரு முறைக்கு பலமுறை யோசித்துப் பேசினோம் என்றால், அதனால் வரும் பின்விளைவுகளைத் தவிர்க்கலாம்.

இப்படிச் செய்தால் மட்டுமே நாம் விவேகமுள்ளவர் என்ற பெயரினை எடுப்போம். அதே நேரத்தில் மற்றவர்களின் மதிப்பையும், மரியாதையையும் சம்பாதிப்போம்.

''கேட்பதற்கு தீவிரமாகவும், பேசுவதற்கு நிதானமாகவும், கோபிப்பதற்கு தாமதமாகவும், இருக்க வேண்டும்.''

இதுவே நல்லது. மற்றவர்கள் பேசுவதை நாம் காது கொடுத்துக் கேட்போம் என்றால், அது அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். ஏனென்றால், நாம் அவர்கள் மீது அக்கறை காட்டுகிறோம் என்பது மட்டுமல்ல, அவர்கள் மீது மரியாதை வைத்திருக்கிறோம் என்பதையும் அது காட்டும்.

பெரியவர்களைப் பார்த்துத்தான் பல விஷயங்களை சிறியவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். இதனை மனதில் வைத்து நாம் செயல்பட வேண்டியது அவசியம்.

யாராவது நம் மனதை புண்படுத்தும் விதத்தில், நம் கோபத்தை கிளறும் விதத்தில் எதையாவது சொன்னால்... அந்த சந்தர்ப்பத்தில், நாம் கோபிப்பதற்கு தாமதிக்க வேண்டும். அதாவது, சட்டென்று கோபப்பட்டு அவர்களைப் போலவே பேசிவிடக் கூடாது.

யாருக்குத் தெரியும்? அந்த நபர் ஒருவேளை ஏதாவது ஒரு மன அழுத்தத்தில் இருந்திருக்கலாம். தான் அப்படி பேசியதற்காக பிறகு நம்மிடம் மன்னிப்பும் கேட்கலாம். ஆகவே, நமக்கு பொறுமை மிகவும் அவசியம்.

''இனிய நாவு தான்... ஆனாலும் அது எலும்பையும் நொறுக்கக்கூடியது.'' ஆம், ''சாந்த குணம் பலவீனத்திற்கு அடையாளம்'' என்ற ஒரு பொதுவான கருத்து நிலவுகிறது. அது

உண்மையல்ல. சாந்த குணம்... பலத்திற்கே அடையாளம். உதாரணமாக, கோபத்தாலோ, தவறான எண்ணத்தாலே நம்மை சிலர் கறாராகவும், கண்டிப்பாகவும் எதிர்க்கலாம். உடலில் எலும்பு எப்படி உறுதியாக இருக்கிறதோ, அதைப் போன்று. அப்படிப்பட்டவர்களிடம் நாம் மிகப் பொறுமையாக பேசினோம் என்றால், அவர்களின் கோபக்குணத்தை நாம் வென்றுவிடலாம்.

நாம் கோபப்படாமல் பேசினோம் என்றால் அது கண்ணியமானதாக, இனிமையானதாக, மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதாக இருக்கும். ஆம், அது ''வெள்ளித்தட்டில் வைக்கப்பட்டு பொன்னால் செய்யப்பட்ட பழங்களை வழங்குவது போல் மிகவும் பெருமைக்குரியதாக இருக்கும்.''

என்றுமே, நாம் எவரிடமும் இனிமையாகப் பேசிப் பழகுவோம்!

---

# இயேசுவின் 12 சீடர்கள்

மத்தேயு 10:2-4

| | |
|---|---|
| பேதுரு என்னப்பட்ட சீமோன் | அந்திரேயா |
| யாக்கோபு | யோவான் |
| பிலிப்பு | பர்தொலொமேயு |
| தோமா | மத்தேயு |
| அல்பேயுவின் குமாரன் யாக்கோபு | ததேயு என்னும் லெபேயு |
| கானானியனாகிய சீமோன் | யூதாஸ்காரியோத்து |

(கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்த பின்னர் மரித்த யூதாஸ்காரியோத்துக்கு மாற்றாக மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்டார்)

# கத சொல்லப் போறோம்

பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான் (மத்தேயு 13 :45,46).

இயேசு தனது போதனைகளை எப்போதுமே சாதாரண மக்களின் வாழ்க்கையிலிருந்தே தேர்ந்தெடுக்கிறார். அவருடைய உவமைகள் ஏனோ தானோ என இருப்பதில்லை. ஒவ்வோர் தேர்வுக்குப் பின்னும் ஆழமான அர்த்தம் உண்டு.

முத்து உவமையும் அப்படி விரிவான விளக்கங்களை நமக்குத் தருகிறது. விலையுயர்ந்த முத்தைத் தேடிச் செல்லும் வணிகராக தேவகுமாரன் இயேசு இருக்கிறார். ஒரு வணிகருக்குத் தான் தெரியும் முத்துகளில் எது சிறப்பானது, எது உண்மையானது, எது போலியானது எனும் சகல விஷயங்களும். உள்ளங்களை அறிய மனிதர்களால் முடிவதில்லை. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள், ஆனால் அகத்தின் அழகு ஆண்டவனுக்கு மட்டுமே தெரியும்.

முத்து என்பதை ஏன் இயேசு பயன்படுத்துகிறார்? அது மட்டும் தான் ஒரு உயிரினமான சிப்பியின் வயிற்றிலிருந்து கிடைக்கின்ற விலையுயர்ந்த பொருள். அது உருவாகும் விதமும் கவனிக்கத்தக்கது. சிப்பியின் வயிற்றுக்குள் நுழைந்து விடுகின்ற மணல் அங்கேயே தங்கி விடுகிறது. அது சிப்பியின் வயிற்றுக்கு ஒரு உறுத்தலாகவே எப்போதும் இருக்கிறது. மெல்ல மெல்ல அந்த மணலின் இயல்பு மாறத் துவங்குகிறது. கொஞ்சம் கொஞ்சமாக உருமாற்றம் நிகழ்கிறது. அடுக்கடுக்காய் அதன் பளபளப்பு அதிகரிக்கிறது. கடைசியில் அந்த முத்தானது முழுமை அடைகிறது. முழுமை அடையாத முத்து வியாபாரியை வசீகரிப்பதில்லை.

நமது வாழ்க்கையில் நேர்கின்ற சோதனைகள் நமது இதயத்தில் மணல் துகளைப் போல, நெருஞ்சி முள்ளைப் போல உறுத்திக்கொண்டே இருக்கின்றன. அந்த சோதனைகளை இறைவனின் துணையுடன் தொடர்ந்து எதிர்கொண்டு வரும்போது நாம் ஆன்மீகத்தில் பலம் பெறுகிறோம். சோதனைகளைக் கண்டு விலகி ஓடாமல், சோதனைகளை சந்திக்கப் பயந்து அதை புறந்தள்ளாமல் தொடர்ந்து போரிட வேண்டும்.

நம்மை பாவத்திற்குள் விழவைக்கின்ற சோதனைகள், பிறரை பாவத்துக்குள் விழத் தூண்டும் சோதனைகள் அனைத்தையும் பரிசுத்த ஆவியின் துணையுடன் நாம் எதிர்க்கும் போது நாம் இயேசுவைப் போல மாறத் துவங்குகிறோம். கடைசியில் சிப்பி உடையும்போது, தனது வாழ்க்கையை ஒப்படைக்கும் போது, அந்த அழகிய முத்து வெளிப்படுகிறது. அந்த அழகிய மாற்றத்தையே இயேசு நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார்.

நமது வாழ்க்கை முத்தைப் போல பிரகாசிக்கிறதா? நாம் சிப்பியாய் இருந்த போதே நம்மைத் தேர்ந்து கொண்ட இறைவனுக்கு நாம் முத்தைப் பரிசளிக்க ஆயத்தமாய் இருக்கிறோமா? அந்த முத்துக்காக தேவகுமாரன் எவ்வளவோ ஆவலாய் இருக்கிறார்.

தேவகுமாரன் எனும் மகிமையை, பரலோக வாழ்வின் ஆனந்தத்தை, தந்தையுடனே இணைந்திருக்கும் பரவசத்தை, புனிதரான அவருடைய தூய்மையை எல்லாவற்றையும் விட்டுத் தர தயாராய் இருந்தார். நமது பாவங்களை சுமந்து, நமது குற்றங்களுக்காக அவர் பாவியாகவே உருவம் எடுத்தார். எல்லாவற்றையும் இழந்து அவர் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்று தான். நமது வாழ்க்கை முத்தைப் போல இருக்க வேண்டும் என்பதை!

வெறும் சிப்பியாய் வாழ்ந்து முடித்தால் விண்ணகத்துக்கு எடுத்துச் செல்லப்படாமல் நிராகரிக்கப்படுவோம். நிலைவாழ்வு கிடைக்காமலேயே போய்விடும். பிறருடைய பார்வைக்கு மட்டும் முத்து இருப்பவர்களைப் போல நடித்து நடந்தாலும் தேவனால் புறக்கணிக்கப்படுவோம். காரணம், இயேசு மட்டுமே அறிகிறார் முத்தின் உண்மையான தரத்தை.

இயேசுவின் உவமை நமது வாழ்க்கையை மறுபரிசீலனை செய்ய அழைப்பு விடுக்கிறது.

1. பரிசுத்த ஆவியின் துணையுடன் நமது வாழ்க்கையை ஒரு விலையுயர்ந்த முத்தாக மாற்றுவோம்.

2. இறைவன் தந்த வாழ்க்கையை அவருக்கே ஒப்படைப்போம்.

விலையுயர்ந்த அந்த முத்தை தேவகுமாரன் இயேசுவுக்கு ஒப்பிடுவோரும் உண்டு. எல்லாவற்றையும் விற்றும், எல்லாவற்றையும் விட்டும், இயேசுவைப் பற்றிக் கொள்ளும் மனம் வேண்டும் என்பதே அவர்கள் தரும் விளக்கம். உவமைகள் தரும் விளக்கத்தில் எது சரி, எது தவறு என்பது இல்லை. தேவ வசனத்தை பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய் விளக்குகிறார் என்று புரிந்து கொள்வதே சரியானது.

# ஊரும் பேரும்

| | | | | |
|---|---|---|---|---|
| க | லி | லே | யா | து |
| ப் | கா | கோ | ரி | எ |
| ப | த் | நா | மா | பே |
| ர் | ஊ | யீ | ச | சு |
| ந | பா | ன் | யி | ஆ |
| கூ | பெ | த் | தே | ல் |
| ம் | லே | ச | ரு | எ |

வேதாகமத்திலுள்ள ஊர்களை கண்டறிந்து வட்டமிடுங்கள்.

# கேள்வியும் வேள்வியும் Q&A

**இயேசுவைப்போல் பிறப்பதற்கு முன்பே பெயர் இடப்பட்டவர்கள் வேறு யாரேனும் பைபிளில் உண்டா? என்று கூறுங்களேன்.**

- டேவிட், வடபழனி

அன்புடைய தம்பிக்கு, வணக்கம். இயேசுவைப்போல் பிறப்பதற்கு முன்பே பெயர் இடப்பட்டவர்கள் பைபிளில் சிலர் உண்டு.

**ஈசாக்கு:**

அப்பொழுது தேவன்: உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக... (ஆதியாகமம் 17:19).

**இஸ்மவேல்:**

பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால், அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக... (ஆதியாகமம் 16:11).

**யோசியா:**

அந்த பலிபீடத்தை நோக்கி: பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்... (1 இராஜாக்கள் 13:2).

**சாலொமோன்:**

இதோ, உனக்குப் பிறக்கப்போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்; சுற்றிலுமிருக்கும் அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்; ஆகையால் அவன் பேர் சாலொமோன் என்னப்படும்... (1 நாளாகமம் 22:9).

**யோவான் ஸ்நானகன்:**

தூதன் அவனை நோக்கி: சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது, உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக (லூக்கா 1:13).

**கோரேஸ்:**

கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான். ...நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன். (ஏசாயா 44:28; 45:4).

**இயேசு:**

அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். லூக்கா 1:31




# உலக பார்வை தினம்

உலக பார்வை தினமான அக்டோபர் 8ஆம் நாளை பார்வையின்மை மற்றும் பார்வைக் குறைபாடு குறித்த விழிப்புணர்வு நாளாக ஒவ்வொரு வருடமும் மக்களிடையே ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது உலக சுகாதார அமைப்பு.

உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிவரப்படி உலகில் 4 கோடி பேர் கண்பார்வை இழந்தவர்கள் என்கிறது. உலகில் கண்ணாடி அணிவோரின் எண்ணிக்கை 400 கோடியைத் தொட்டுவிட்டதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. இந்தியாவில் முதியவர்களைக் கடந்து கண்பார்வை குழந்தைகளையும், இளைஞர்களையும் அதிகம் பாதித்திருக்கிறது. 5 கோடி மக்களுக்கும் மேல் கண்பார்வைக் குறைபாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு மருத்துவ ஆய்வு தெரிவிக்கிறது.

நமது குழந்தைகளில் கண்பார்வைக் கோளாறு காரணமாக கண்ணாடி அணிபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆன்லைன் மூலம் நடத்தப்படும் பாடங்களால் அவர்கள் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளனர் என கூறுகிறார் மருத்துவர் செ. சிமியோன்.

ஆன்லைன் வகுப்புகள் மட்டுமல்லாது, குழந்தைகள் 3 மணி நேரத்துக்கு மேலாக ஆன்லைன் விளையாட்டுகளை விளையாடுகின்றனர். இதன் காரணமாக கண்களின் பார்வைத் திறன் பாதிக்கப்படலாம். எனவே, குழந்தைகளின் கண்களுக்கு ஓய்வை அளிக்க வேண்டும். இதனைப் பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். கண்களில் பாதிப்பு ஏற்படுவதுடன் குழந்தைகள் மனரீதியாகப் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதன் காரணமாக அவர்களது வளர்ச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியில் பாதிப்பு ஏற்படும்.

குழந்தைகள் மட்டுமின்றி வீட்டிலிருந்து பணிபுரியும் பெரியவர்களும் கண்சார்ந்த பாதிப்புகளுக்கு அதிகம் உள்ளாகி வருகின்றனர். தொடர்ச்சியாக மானிட்டர்களைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். 30 நிமிடத்துக்கு ஒருமுறை கண்களுக்கான பயிற்சிகளை அளிக்க வேண்டும். தொடர்ந்து கணினியைப் பார்த்துக் கொண்டிருந்தால் நிச்சயம் தலைவலி மற்றும் சில பாதிப்புகள் ஏற்படும். மேலும் கண்களிலிருந்து நீர் வடிதல் போன்ற பிரச்சினைகளும் ஏற்படலாம்.

எனவே, கண்களுக்கான ஓய்வை நாம் நிச்சயம் அளிக்க வேண்டும். எவ்வளவு வேலைப்பளு இருப்பினும் கண்களுக்கு ஓய்வு அளிப்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நீரிழிவு அதிகரிக்கும் போதும், ரத்த அழுத்தம் அதிகமாகும்போதும் கண்களில் அதிக பாதிப்பை உண்டாக்குகிறது. இவ்வாறான நேரங்களில் கண் மருத்துவரை அணுகுவது நல்லது. 8 மணி நேரமாவது எந்தத் தொந்தரவுக்கும் நம்மை நாம் ஆட்படுத்திக் கொள்ளாமல் நமது உடலுக்கும், நமது கண்களுக்கும் போதிய ஓய்வை அளிக்க வேண்டும்''. சத்தான உணவுகளை உட்கொண்டு, கண்ணுக்குத் தேவையான ஓய்வை அளித்துப் பார்வையில் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்போம்.

கண்களோடு நரகத்திற்குச் செல்வதைப் பார்க்கிலும் கண்கள் இல்லாமல் பரலோகம் போவது மேல் என்பது வேதவாக்கு. வழி காண தேவையான விழிக்கு முக்கியத்துவம் தருவது போலவே கிறிஸ்துவை கண்டடையத்தக்க கண்களைப் பெறவும் மன்றாடுவோம். குழந்தைகளின் பார்வைத் திறன் மேம்பட ஜெபிப்போம்.

Elim
GLORIOUS REVIVAL CHURCH

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
நடத்தும்

# சிறப்பு சுகமளிக்கும் ஆராதனை



**PASTOR**
**OSBORNE**
*Jebadurai*



**அக்டோபர்**
**23** திங்கள்,
**24** செவ்வாய்

**மாலை**
**6:00மணி முதல்**
**8:30 வரை**

**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**

50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024.







# ELIM GLORIOUS REVIVAL CHURCH

#50, Railway Station Road, Kodambakkam Chennai- 600024, India, For 24x7 Prayer: 94443 22200, 94443 22211

E-mail: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com